2023 செத்தெம்பர்

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**மொத்த நடவடிக்கைச் சுட்டெண் அளவு**
**2023 செத்தெம்பர்**
**44.3**

**கட்டடவாக்கத் தொழிற்துறை 2023 செத்தெம்பரில் 44.3 கொண்ட மொத்த நடவடிக்கைச் சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து கட்டடவாக்க நடவடிக்கைகளில் தொடர்ச்சியான சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது.** கருத்திட்டப் பணிகளில் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு மேலதிகமாக, மாத காலப்பகுதியில் நிலவிய தொடர்ச்சியான மழைவீழ்ச்சியும் கிடைக்கப்பெறுகின்ற கட்டடவாக்க நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினைப் பாதிப்படையச் செய்தது.

செத்தெம்பரில் புதிய கட்டளைகள் மெதுவான வேகத்திலேனும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன. விலைக்கோரல்களைக் கோரும் வாய்ப்புக்கள், விசேடமாக சில வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக படிப்படியாகத் திறக்கப்பட்ட போதிலும், விலைக்குறிப்பீட்டு விலைகள் மிகவும் போட்டிமிக்கவையாகக் காணப்பட்டன என்று பல பதிலிறுப்பாளர்கள் தெரிவித்தனர். அதேவேளை, அனேகமான கம்பனிகள் அத்தியாவசியமான பணியாளர்களைக் கொண்டு இயங்குவதற்கு விரும்புகின்றமையினால் தொழில்நிலை சுருக்கமடைந்தே காணப்பட்டது. மேலும், கட்டடவாக்கப் பணியில் குறைவுக்கு இசைவாக மாத காலப்பகுதியில் கொள்வனவுகளின் அளவும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, பிரதானமாக கேள்வியில் குறைவு காரணமாக நிரம்பலர் விநியோக நேரம் மாத காலப்பகுதியில் குறுக்கமடைந்து காணப்பட்டது.

| மாறி | ஓகத். | செத். | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மொத்த நடவடிக்கை** | 47.0 | 44.3 | - | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 41.2 | 45.7 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 26.5 | 35.7 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 44.1 | 42.9 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 47.0 | 48.6 | + | குறுக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

முன்னெடுக்கப்படும் விலைக்கோரல் செயன்முறைகள், சில இடைநிறுத்தப்பட்ட அரசாங்க நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களை மீளத் தொடங்குவதில் சாதகமான அபிவிருத்திகள் என்பவற்றின் பிரதான காரணமாக அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான எதிர்பார்க்கைகள், சாதகமாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், சக்தித் தொடர்புபட்ட செலவுகளின் மேல்நோக்கிய போக்கு, சாதகமற்ற வானிலை நிலைமைகள் என்பன பற்றி கம்பனிகள் கவலையடைந்துள்ளன.

**கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *தொகுத்தல்: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்[1]*

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கும்.

கொ.மு.சு =50; துறையானது நடுநிலையில் காணப்படுகிறது

கொ.மு.சு >50; துறையானது பொதுவாக விரிவடைகிறது

கொ.மு.சு <50; துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது

### *மாறிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்:*

மொத்த நடவடிக்கை: கட்டடவாக்க நடவடிக்கையின் மொத்த அளவு, பன்னாட்டு நடத்தையினைப் பின்பற்றி 'கட்டடவாக்க கொ.மு.சு' ஆக குறிப்பீடு செய்யப்படும் முதன்மைச் சுட்டெண் இதுவாகும். இது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் தொழில்நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

தொழில்நிலை: நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை

கொள்வனவுகளின் அளவு: உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்

நிரம்பலர் விநியோக நேரம்: கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு ஏனைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.

### *அளவீட்டு பதிலிறுத்தல்கள்*

மாதத்திற்கு மாதம் அபிவிருத்திகளை எடுத்துக்காட்டுவதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுத்தல்களை உள்ளடக்கி கட்டடவாக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உயர்தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்க கம்பனிகளை இலக்காகக் கொண்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

---

[1] உலகளாவிய தொகுப்பாளராக இனங்காணப்பட்டு உலகளவில் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சுட்டெண்களை தொகுக்கின்ற எஸ்அன்ட் பி குளோபல் நிறுவனத்தால் பின்பற்றப்படும் முறையியல் பயன்படுத்தி கொ.மு.சு தொகுக்கப்படுகின்றது.